REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5[illegible]

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 12உ புதன் (28—9—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 13உ வியாழன் (29—9—55) [இதழ் 91

செயற்கை எண்ணெய் உற்பத்தி ஆலை

புதுடில்லி, செப் 27—

ஆண்டொன்றுக்கு 8 இலட்சம் டன் செயற்கை எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலை ஒன்றைத் துவங்கும் திட்டத்தை ஒட்டி ஹெயின்ரிச் கோப்பர்ஸ் என்ற ஜெர்மன் நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் கோப்பர்ஸ் என்பார், திட்டம் பற்றியதனது விசாரணை அறிக்கை தயாரிப்பதற்காக, அக்டோபர் திங்களில் இந்தியா வருவதாகத் தெரிகிறது.

வேறு இரண்டு நிறுவனங்களும் திட்டம் பற்றிய தங்களின் அறிக்கைகளை அடுத்த திங்களில் இந்திய சர்க்காரிடம் தரும் என்று தெரிகிறது.

வடநாட்டவரின் இந்தி மொழி வெறி

தலைநகரில் தற்கொலைகள்!

ஏழ்மையும்-வேலையின்மையும் காரணங்கள்

உதவி மந்திரி அறிவிப்பு

புதுடில்லி, செப். 27—

இந்தியத் தலைநகரான புதுடில்லியில் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே வருவதாக ராஜ்யங்கள் சபையில் உள்நாட்டு இலாகா உதவி மந்திரி பி. என் தத்தார் தந்துள்ள அறிவிப்பின் மூலம் தெரியவருகிறது.

தற்கொலை எண்ணிக்கை 1947-ல் 19; 1948-ல் 28; 1949-ல் 39; 1951-ல் 72; 1952-ல் 75; இந்த ஆண்டில் கடந்த 9 மாதங்களில் ஏற்கனவே 46 தற்கொலைகள் நடந்துவிட்டன என்று தெரிகிறது.

இப்படித் தற்கொலைகள் அதிகரித்து வருவதற்கு—காதல், குடும்பக் கவலை, நீடித்த நோய், பரீட்சைகளில் தோல்வி, ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம்—இவை எல்லாம்தான் காரணம் என்றும், உதவி மந்திரி கூறியிருக்கிறாராம்.

மக்கள் சபையில் தென்னாட்டு உறுப்பினர்கள் 'போராட்டம்'

'இந்திக் குழுவிடம் நீதியும் நியாயமும் கிடைக்காது'

தோழர் குருபாதசாமி கண்டனம்

புதுடில்லி, செப். 27—

இந்தியப் பேரரசு, இந்தி மொழியை அரசாங்க மொழியாக ஆக்குவதில் காட்டிவரும் தீவிரம், அவர்களது ஏகாதிபத்தியப் போக்கினைத் தெளிவாக உலகுக்குத் தெரிவித்து வருகிறது.

இப்போதைய இந்திய அரசியல் அமைப்பான 'ஏக இந்தியா' நீடித்து நிலைபெறுவது, இந்தியா முழுவதும் இந்தி மொழிக்கு ஆதிக்கம் கிடைத்தாலன்றி சாத்தியமானதல்ல—என்று அவர்கள் கருதுவதால், இந்தி மொழிக்குச் சற்றும் எவ்வகையாலும் தொடர்பில்லாத திராவிட மொழிகள் வழங்கும் தென்னாட்டில்—திராவிடத்தில் இந்தியைத் திணிப்பதில், வடநாட்டு அரசியல்வாதிகள் அளவுக்கு அதிகமான 'அக்கறை' காட்டிவருவதும் கண்கூடு!

'இந்தி கட்டாயமில்லை,' என்று கூறிக்கொண்டே பல அலுவல் துறைகளிலும் இந்தியைப் புகுத்தி வருகின்றனர்.

அரசியல் சட்டத்தைப் புகலாகக்கொண்டு, இந்தி மொழியை 15 ஆண்டுகளுக்குள் அலுவல் மொழியாக்கிவிட அவர்கள் ஒரு மொழிக் குழு அமைத்தனர்; அந்தக் குழுவின் செலவுகளுக்கான உபமானியக் கோரிக்கை பற்றிய விவாதம் மக்கள் சபையில் வந்த போது, பல தென்னாட்டு உறுப்பினர்கள் வடவரின் தீவிரப்போக்கினை எதிர்த்து திறம்படப் 'போராட்டம்' நடத்தியிருக்கின்றனர்.

இந்தி மொழிக் குழுவில் இந்தி மொழி வழங்கும் பகுதியினரே அதிகம் இடம் பெற்றிருப்பதாயும், அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள 15 ஆண்டுகள் போதுமானதல்ல என்றும் பல உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

ம. சோ. கட்சியைச் சேர்ந்த குருபாதசாமி பேசுகையில், இந்தி மொழி வெறியர்கள், 'தென்னாட்டவர் இந்தியைச் சீக்கிரமே கற்றுக்கொள்ள வேண்டும்,' என்று கூறிவருவதை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

அவர் குறிப்பிட்டதாவது:—

"ஒரு புதியமொழியை ஓரிரண்டு ஆண்டுகளில் கற்றுக் கொள்வதென்பது இயலாது என்பதால், இந்தி வெறியர்கள் என்னதான் துரிதப்படுத்தினாலும் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை;

"15 ஆண்டுகளில் இந்தியை அலுவல் மொழியாக்க வேண்டும் என்ற அரசியல் சட்டத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது (இப்போது காங்கிரஸ்காரர்கள் கூச்சல் போட்டனராம்!);

"இந்தி மொழியைக் கற்றுக் கொள்வதற்கு எங்களுக்கு (தென்னாட்டவருக்கு) 50-ஆண்டுகள் தேவைப்படலாம்."

இந்த நேரத்தில் சிலர் குறுக்கிட்டு, '500 ஆண்டுகள் வேண்டுமா? அதுவரை நீங்கள் உயிருடன் இருப்பீர்களா?' என்றெல்லாம் கேலி பேசினராம்!

உடனே தோழர் குருபாதசாமி, சபைத் தலைவரை நோக்கி, 'இதோ இந்தி மொழி வெறிக்கு இன்னுமொரு எடுத்துக் காட்டு' என்று கூறியிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:—

"இந்தி பற்றிய சர்க்காரின் கொள்கை பைத்தியக்காரத்தனமானது; இந்தி மொழிக் குழுவில் இந்தி பேசும் பகுதிப் பிரதிநிதிகள் அடைந்து கிடக்கின்றனர்; இந்தக் குழுவிடமிருந்து நீதி, நியாயம், நேர்மை இவற்றை ஒருவர் எதிர்பார்க்க முடியாது;

"இந்தி வெறியர்கள் தென்னாட்டவர்மீது இந்தியை வலுக்கட்டாயமாக அவசரப்பட்டுத் திணிப்பார்களேயானால், அவர்களின் எண்ணமே ஈடேற முடியாமல் போய்விடும்."

ம சோ. கட்சியைச் சேர்ந்த மற்றொரு தென்னாட்டு உறுப்பினரான முத்துசாமி வல்லத்தரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தி மொழிக் குழுவில், இந்தி வழங்காத பகுதியினருக்குப் போதுமான பிரதிநிதித்துவம் தரப்படவில்லை; குறிப்பாக, தென்னாட்டுப் பல்கலைக் கழகங்களுக்குக் குழுவில் பிரதிநிதித்துவம் தரப்படவில்லை;

"சென்னை மாநிலத்திலிருந்து வருபவர்களுக்கு மத்திய பணித் தேர்வுக் குழுப் பரீட்சையிலும், ஐ. ஏ. எஸ். பரீட்சையிலும் இந்தி மொழியில் கேள்வி கேட்கப்படமாட்டாது—என்று சர்க்கார் உறுதி மொழி தரவேண்டும்; இந்தி மொழியை அலுவல் மொழியாக்குவதை இன்னும் 30 ஆண்டுகளுக்கு ஒத்திப் போட வேண்டும்."

பல இந்தி வெறியர்கள், தென்னாட்டு உறுப்பினர்கள் பேசும் போது ஆத்திரப்பட்டு, கேலியும் கிண்டலும் செய்தனராம்.

விவாதத்திற்குப் பதிலளித்த மத்திய உள் நாட்டிலாகா மந்திரி பண்டித பந்த் தனது பழைய பல்லவியையே திரும்பவும் பாடியிருக்கிறார்.

"இந்திய அரசியல் சட்டத்தில் இந்தி மொழி இந்திய அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது; 15 ஆண்டு காலத்தில் ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை அலுவல் மொழியாக்க வேண்டுமென அரசியல் நிர்ணய சபை ஏற்றுக்கொண்டது; வடக்கு—தெற்கு, கிழக்கு—மேற்கு என்ற வேறுபாடு இன்றி, அரசியல் நிர்ணய சபையில் அப்போது எல்லோரும் ஏற்றுக்கொண்டனர்;

"வெளிநாட்டில் உள்ள தூதுவர்கள் பேசக்கூடிய வகையில், இந்தியாவிற்கு ஒரு தேசிய மொழி இருக்க வேண்டியது அவசியம் என்பதை எல்லோரும் ஒப்புவர் என்று நம்புகிறேன்; இந்தியா

(4-ம் பக்கம் பார்க்க.)

கிளர்ச்சியை

அனுமதிக்கமாட்டார்களாம்!

ஜலந்தர் செப் 26—

"மொழி, மற்றும், மாநிலப்புனரமைப்பு போன்ற சிறிய சிக்கல்களுக்காக எவ்விதக் கிளர்ச்சியிலும் எவரேனும் ஈடுபடுவதை அரசாங்கம் அனுமதிக்காது; 1947-ம் ஆண்டுச் சம்பவங்கள் மீண்டும் நிகழ நாங்கள் அனுமதிக்கமாட்டோம்"

என்று மத்திய சர்க்கார் குடியிருப்பு விநியோக இலாகா மந்திரி சர்தார் சுவரண் சிங் தெரிவித்திருக்கிறார்.

நாட்டைவிட்டு பெரான் வெளியேறுவதில் தாமதம்

பியூனஸ் அயர்ஸ், செப் 27—

தென் அமெரிக்க நாடான அர்ஜெண்டைனாவின் முன்னாள் குடியரசுத் தலைவரான ஜூயென் பெரான், நாட்டைவிட்டு வெளியேறுவது தாமதப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சில நுணுக்கமான அரசியல் அம்சங்கள் குறித்து எழுந்த தகராறுதான், அவர், பராகுவே செல்ல முடியாமல் படகு ஒன்றிலேயே கடந்த செவ்வாய் முதல் காத்துக்கிடக்க வேண்டியிருக்கிறதாம்.

புதிய இராணுவ ஆட்சி, பெரான் பத்திரமாக நாட்டைவிட்டு வெளியேற வசதி செய்யப்படும் என்று அறிவித்தது என்றாலும், இங்குள்ள பராகுவே தூதுவரான சாவெஜ், தாங்கள் இந்த உறுதிமொழியைத் தருவதற்கு முன்பு, பெரானுக்கு படகு தந்து அவரை எப்படிப் படகில் ஏற்றலாம் என்று இராணுவ ஆட்சியினரால் கேட்கப்பட்டிருக்கிறாராம்.

பராகுவே தூதுவரோ, தான் இராணுவ ஆட்சியை அவமதித்துவிட்டு அவ்வாறு செய்யவில்லை என்றும், பெரானுக்கு பாதுகாப்புத் தருவதில் அவசர அவசரமாக, வேலை செய்ய வேண்டியிருந்ததினாலேயே தாம் படகு தந்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறாராம்.

அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்தன!

இந்தியா—அமெரிக்கா தொழில் நுணுக்கக் கூட்டுறவு ஒப்பந்தப்படி, 8,800 இரயில்வே வாகன்கள் தருவதற்கு அமெரிக்கா இசைந்துள்ளது அத்தொகையில் ஒரு பகுதியாக 550 இரயில்வே வாகன்கள் இந்தியா வந்தடைந்தனவாம்.

பெரியார்—நேரு சந்திப்பு?

காமராசரின் புதிய முயற்சியாம்!

திருச்சி அரசியல் வட்டார வதந்தி

(திருச்சி தனி நிருபர்)

திருச்சி அரசியல் வட்டாரத்தில் ஒரு பலமான வதந்தி உலவிவருகிறது.

திருச்சிக்கு நேரு பண்டிதர் வருகிற சமயம், பெரியார், அவரைச் சந்திக்கப் போவதாகவும், இந்தச் சந்திப்பைக் காமராசர் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகவும் பேசிக்கொள்ளப்படுகிறது.

தேசியக் கொடி எரிப்பு பற்றி நேரு பண்டிதர் மிகுந்த மனவேதனை அடைந்திருப்பதால், பெரியாரைக் கொண்டே அதற்கான விளக்கம் கூறவைத்து, நேரு பண்டிதருக்கு 'மனச்சாந்தி' ஏற்படுத்தவே காமராசர் இந்த ஏற்பாடு செய்ய விரும்புகிறார் என்று காங்கிரஸ் வட்டாரத்தினர் கருதிப் பேசி வருகின்றனர்.

நேரு பண்டிதருக்கும் சமுதாய சீர்திருத்தத்தில் மிகுந்த ஆர்வம் இருக்கிறது என்று எடுத்துக்கூறி, 'நீங்கள் நேரு பண்டிதரைச் சந்தித்துப் பேசினால் தகுந்த பயன் இருக்கும்,' என்று பெரியாரிடம் காமராசர் எடுத்துச் சொல்லியே இந்தச் 'சந்திப்பு'க்கு ஏற்பாடு செய்வதாகத் தி. க. வட்டாரம் பேசி வருகிறது.

'சமுதாயத்திற்கே பெரிய ஆபத்து'

காமராசர் கூறுகிறார்!

வேலூர், செப். 26—

"வேலையில்லாப் பிரச்சினை இந்த நாட்டிற்கு ஒரு பெரிய சோதனையாகும்; இந்தியாவில் அதிகமான அளவில் ஏழை மக்களைக் கொண்ட பகுதி தமிழ் நாடு தான்; படித்தவர்கள், படிக்காதவர்கள்—இருபாலாருமே வேலை கிடைக்காமல் திண்டாடுகிறார்கள்; படித்தவர்கள்தான், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி வகைகளைக் கண்டுபிடிக்க வேண்டும்; படித்தவர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டால், அது, சமுதாயத்திற்கே பெரிய ஆபத்தாகும்"

என்று, ஆம்பூர் முஸ்லீம் உயர் நிலைப்பள்ளியின் பொன்விழாவில் பேசுகையில், முதலமைச்சர் காமராசர் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 28—9—'55 புதன்

சிந்திக்க வேண்டும்!

உழுது உண்டு வாழ்பவரான விவசாயப் பெருமக்கள், தென்னாட்டைப் பொறுத்தமட்டில் எந்த நிலையில் வாழ்கின்றனர் என்பதை, இந்தியப் பேரரசு ஆராய்ச்சி நடத்தி வெளியிட்டுள்ள அறிக்கை விளக்கமாகத் தெரிவிக்கிறது.

அந்த அறிக்கையின் சாராம்சங்களை, நம்முடைய இதழில் வெளியிட்டிருக்கிறோம்.

தென்னாட்டில் ஆண்டு ஒன்றுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு 181 நாட்கள்மட்டுமே வேலை கிடைக்கிறது; இந்தியா வெங்கணும் சராசரியாக விவசாயத் தொழிலாளர்களுக்கு 218 நாட்களுக்கு வேலை கிடைக்கிறது; தென்னாடு நீங்கலாக உள்ள வட இந்தியாவில் விவசாயிகளுக்கு சராசரியாக சுமார் 300 நாட்களுக்கு வேலை கிடைப்பதாக முன்பு வெளிவந்த இந்தியா முழுமைக்குமான அறிக்கை தெரிவித்தது.

அதேபோல, தென்னாட்டில் ஒரு விவசாயக் குடும்பத்தின் வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ. 382 மட்டும்தான்; ஆனால் இந்தியா முழுமைக்கும் சராசரி ரூ. 447 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. வட நாட்டில் சுமார் ரூ. 600 என்று முன்பு வந்த முழு அறிக்கை கூறிற்று.

'இப்படி, வட நாட்டு—தென்னாட்டு விவசாயிகளின் வாழ்க்கை நிலையில் மகத்தான வேறுபாடுகள் இருக்கின்றன.

மேலும், 'விவசாயிகளில் கடன் பட்டிருப்போர் தொகையும் தென்னாட்டில்தான் அதிகம்' என்பதையும் அந்த அறிக்கை தெரிவிக்காமல் இல்லை.

வட நாட்டவரைவிட தென்னாட்டு விவசாயிகளுக்கு வேலை நாட்கள் குறைவு—வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம்; வருமானம் குறைவு—கடன் தொல்லை அதிகம்!

தென்னாட்டவரைவிட வட நாட்டு விவசாயிகளுக்கு வேலை நாட்கள் அதிகம்—வேலை இன்மை குறைவு; வருமானம் அதிகம்—கடன் தொல்லை குறைவு!

இந்தப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டது—1951-ம் ஆண்டு நிலைகளைக் கொண்டு—என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது; அதாவது, பக்ரா-நங்கல், கோசி, ஹிராகுட் முதலிய பெரும் பெரும் அணைக்கட்டுத் திட்டங்களும், நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களும் உருவாக்கப்படுவதற்கு முன்பிருந்தே வடநாட்டு விவசாயிகளுக்கு, தென்னாட்டவரினும் வளமான வாழ்வு கிடைத்திருக்கிறது.

புதிய அணைக்கட்டுகள் எல்லாம், பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி தர முற்பட்டுவிட்ட இன்று, அங்கு மேலும் வாழ்க்கை நிலை உயர்ந்திருக்க வேண்டியது இயற்கை; ஆனால் ஏற்கனவே தென்னாட்டு விவசாயிகளின் வாழ்க்கை நிலை தாழ்ந்திருக்கிறது; அந்த நிலை மாறுவதற்கு இங்கு, 'கோசி'யோ, 'தாமோதரோ', 'பக்ரா-நங்க'லோ இல்லை; எனவே, இப்போது மீண்டும் ஒரு கணக்கெடுப்பு நடத்தினால், வடவரின் உயரமும், தென்னாட்டவரின் தாழ்நிலையும், மலையும்—மடுவுமாகத் தான் நிச்சயம் இருக்க முடியும்.

தென்னாட்டு விவசாயிகளின் இந்த அவல வாழ்க்கை நிலை மாறுவதற்கு, புள்ளி விவரங்கள் சேகரித்துத்தர முற்பட்ட இந்தியப் பேரரசு, இதுவரை என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டது? இந்தியப் பேரரசிற்கு வரி வசூலித்துத் தரும் பொறுப்பேற்றிருக்கும் இந்த தென்னாட்டு மந்திரி சபைகள் என்ன காரியங்களாற்றி உள்ளன?

'ஏற்கனவே பின்தங்கிய நிலையில் உள்ள தென்னாட்டவரின் வாழ்வு உயர இந்தியப் பேரரசு தீட்டிய அபிவிருத்தித் திட்டங்கள், ஐந்தாண்டுத் திட்டங்கள் எத்தனைதூரம் பயன் பட்டன?'—என்பதை, அகில இந்திய தேசீயம் பேசுவோர், இந்த நாட்டு மக்களுக்கு விளக்கியாக வேண்டும்.

நாட்டில் பெரும்பாலானோர் விவசாயிகள்; அவர்களின் வாழ்க்கை இந்த அவல நிலையிலிருக்கிறது; இது மாற என்ன தான் வழி?

தென்னாட்டில் பெரும் நதிகள் இல்லாத குறையால், தென்னாட்டவரின் வாழ்க்கை, நீண்ட நெடுங் காலத்திற்கு—என்—நிரந்தரமாக இப்படியே தான் இருக்க வேண்டுமா?

நாட்டில் உள்ள நிலங்களை எல்லாம், கூட்டுறவு முறையில், விஞ்ஞான முறைப்படி பயிரிட வேண்டும்; இதற்கு முன்னர் பயிரிடக்கூடிய நிலத்தின் அளவை எவ்வளவுக்கு அதிகரிக்க முடியுமோ அவ்வளவுக்கு அதிகரிக்க வேண்டும். மொத்த நிலங்களில் விவசாயத்திற்குத் தேவையான பேர்களை மட்டும் விவசாயத் தொழிலில் ஈடுபடச் செய்துவிட்டு, எஞ்சியோருக்கெல்லாம் வேறு தொழில் தந்தாக வேண்டும். சுருக்கமாகக் கூறின், இப்போது விவசாயத்தை நம்பிக் கிடப்போரின் தொகை குறைக்கப்பட்டு, நாடு தொழில் மயமாக வேண்டும்.

இது செய்யப்பட்டாலன்றி தென்னாட்டவரின் இன்றைய அவல நிலை மாற வழி இல்லை.

இதனைச் செய்ய, தென்னாட்டு மாநிலங்களில் உள்ள வடநாட்டுத் தாசர் மந்திரி சபைகளால் நிச்சயம் முடியாது—முடியவில்லை இன்று! டில்லி சர்க்காரோ, 'தொழில்கள் எங்கு துவங்கப்பட்டால் என்ன—எல்லாம் ஒன்றுதான்' என்று கூறிவருகிறது. ரூ. 400 கோடி கேட்டால், ரூ. 200-கோடி தருகிறது.

எனவே, நாம், வேறு எத்தனையோ காரண விளக்கங்களுடன் கோரிவருகிற 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சியம் நாடேறினாலன்றி, தென்னாட்டவர்—திராவிடர் மீது வடவர் பூட்டியுள்ள ஆதிக்க நுகத்தடியை அகற்றினாலன்றி, தென்னாட்டவர் வாழ்வு பெற வழி இல்லை—என்பதை, தென்னாட்டவர் நலனில் அக்கறை கொண்ட எல்லோரும் ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

'யதார்த்த' நிலை பற்றியும், பொருளாதார ஏற்றத் தாழ்வு பற்றியும், 'சோறுதானே வாழ்வு' என்பது பற்றியும் பேசித் திரிவோர், குறிப்பாக, இந்த நிலை பற்றிச் சிந்திக்க வேண்டும்!

நாகரீகத்திற்கு ஒரு சோதனை!

தீண்டாமை ஒழிப்பு பற்றி இராதாகிருஷ்ணன் கருத்து!

புதுடில்லி, செப். 26—

'தீண்டாமை ஒழிப்பு' விவாத அரங்கு ஒன்றை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில், டாக்டர் இராதாகிருஷ்ணன் சொன்னார்:—

"தீண்டாமை என்பது, ஒரு சாபக்கேடு; எவ்வளவு விரைவில் மக்கள் அதை ஒழித்துக்கட்டுகிறார்களோ, அவ்வளவு விரைவில், நாட்டிற்கு அது நல்ல பெயரை உண்டாக்கும்; விசேட வாய்ப்புகள் அளிப்பதின் மூலம்தான், சமூகத்திலுள்ள பலவீனமான மக்கள் முன்னேறுவதற்கு உதவி செய்ய இயலும்; நாகரீகத்திற்குச் சோதனையாகவே இப்பிரச்சினை இருக்கிறது."

தென்னாட்டு முறைகேட்டு செடிகள் ஏற்றுமதியாகிறது!

வட நாட்டிலும் பயிரிட வித்தூன்றப்படுகிறது

புதுடில்லி, செப். 26—

தென்னாட்டில் திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுவதும், வீடுகளில் பேதி மருந்துக்காகப் பயன்படுத்தப்படுவதுமான 'நிலவாகை,' 'நில ஆவிரை' என்று கூறப்படும் செடிகள், ஏராளமான அளவில் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஆண்டொன்றுக்கு, ரூ. 7 இலட்சம் பெறுமானமுள்ள சுமார் 26,000 நிலவாகைச் செடிகள் ஏற்றுமதியாகிறது.

இச்செடியை வடநாட்டிலும் உற்பத்தி செய்யலாமெனவும், அதற்கேற்ற 'கால நிலை' அங்கு இருப்பதாகவும், ஆராய்ச்சி செய்ததின் வினைவாகத் தெரிய வருகிறதாம்.

இந்தியாவில் 250 சிங்கங்கள்!

இராஜ்கோட், செப். 27—

ஆசியாவிலேயே சிங்கங்கள் வாழும் பகுதியான சௌராஷ்டிரத்தில் உள்ள காடுகளிலும், அதைச் சுற்றிலுமுள்ள இடங்களிலும் கடந்த ஐந்தாண்டுகளில் 25 சதவிகிதம் சிங்கங்கள் அதிகரித்துள்ளன.

1950-ம் ஆண்டில், இப்பகுதியில் 200 சிங்கங்கள் வாழ்ந்தன; இப்போது 250 சிங்கங்கள் இருக்கின்றன; இதில் ஆண் சிங்கங்கள் 41; பெண் சிங்கங்கள் 100 ஆகும்.

ரஷ்ய விவசாயத்தில்

14 இலட்சம் 'டிராக்டர்'கள், 3,50,000 அறுவடை இயந்திரங்கள், 4,50,000 வண்டிகள் ரஷ்யாவின் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருவதாக சோவியத் கம்யூனிஸ்டு கட்சி இதழான 'பிராவ்தா' எழுதியுள்ளது.

இந்தியக் கைத்தறித் துணி

அமெரிக்கா ஏராளமான அளவு வாங்கும்

பம்பாய், செப் 27—

அமெரிக்காவில் உள்ள பெரிய துணி விற்பனையாளர்கள், இந்திய கைத்தறித் துணிகளை ஏராளமான அளவு வாங்கக் கூடும் என்று தெரிய வருகிறது.

ஒரு பெரிய வர்த்தகர் சுமார் 10 இலட்சம் கெஜம் துணி வாங்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

நியூயார்க் தலைநகரில் கடந்த ஆறு திங்களாக இந்தியத் தூதுவர் அலுவலகத்தின் வர்த்தகப் பிரிவிலிருக்கும் கைத்தறி நிலையத்தில் உள்ள கைத்தறித் துணிகள் அமெரிக்க மக்களிடையே பிரபல்யம் அடைந்து வருகின்றனவாம்.

அமெரிக்க வர்த்தகர் பலர், குறிப்பிட்ட சில ரகக் கைத்தறித் துணிகளை இந்திய வர்த்தகர்கள் தர முடியுமா என்று வினவி வருகின்றனராம்.

'தொடர்ந்து வர்த்தக வாய்ப்பு கிடைக்குமானால், கைத்தறித் துணிகளை அமெரிக்கர் விரும்பும்போல, ஏராளமாக அனுப்பித் தர முடியும்,"

என்று இங்குள்ள பல மாநிலங்களின் கைத்தறியாளர் கூட்டுறவு சங்கத்தினர் தெரிவித்திருக்கின்றனராம்.

குளோரின் தொழிற்சாலை

தூத்துக்குடியில் நிறுவப்படும்?

சென்னை, செப். 26—

சென்னை சர்க்கார், 'குளோரின்' தொழிற்சாலையொன்றை தூத்துக்குடியில் அமைப்பது சாத்தியமெனத் தெரிகிறது.

சென்னை மாநிலத்தில், இது இரண்டாவது தொழிற்சாலையாகும்; ஏற்கனவே மேட்டூரில் ஒன்று இருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்துக்கு அருகே மூன்றாவது தொழிற்சாலை அமைக்கப்படுவதும் சாத்தியமாகக்கூடுமாம்.

தாணிமணிகளை தூய்மைப்படுத்தவும், குடிதண்ணீரை சுத்தப்படுத்தவும் 'குளோரின்' உபயோகிக்கப்படுகிறது.

பிளாஸ்டிக், குளோரினேட்ட ரப்பர், 'டி. டி. டி.' போன்றவைகளுக்கும், குளோரின் உபயோகப்படுவதால் தற்போது அதனுடைய முக்கியத்தும் அதிகரித்து விட்டது.

கைத்தொழில் பொருள்களுக்கு 'மாதிரி நிலையங்கள்'

புதுடில்லி, செப். 26—

கையால் செய்யப்படும் பொருள்களுக்கு அழகான 'மாதிரி'கள் அமைப்பதற்கு, அனைத்திந்திய கைத்தொழில் குழு, வட்டார நிலையங்களை அமைத்திருக்கிறது.

இவ்வாறான 'மாதிரி அமைப்பு' நிலையங்கள் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு இந்தியப் பகுதிகளில் நிறுவப்படும்; பின்னர், இது, மாநிலங்களுக்கு ஒன்றாக விரிவுபடுத்தப்படும். ஒவ்வொரு 'மாதிரி நிலைய'மும், தேர்ச்சி பெற்ற ஒரு கைவினைக் கலைஞரின் பொறுப்பில் இருக்கும். அந்தந்தப் பகுதியில் இருக்கும் கைத்தொழில் பொருள்களுக்கு ஏற்ப இந்த 'மாதிரி'கள் அமைக்கப்படும்.

சென்னை மாநிலத்தில் விவசாய வளர்ச்சி

பசுந் தழை உரத்தால் கிடைத்துள்ள 'செல்வம்'

சென்னை, செப் 26—

சென்னை மாநிலத்தில் பசுந் தழை உரம் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால் நெல் விளைச்சல் ஒரு இலட்சம் டன் அதிகரித்திருக்கிறதென அதிகார வட்டாரங்களில் மதிப்பிடப்படுகிறது. இவ்வாறு அதிகமாக உற்பத்தியாகும் நெல்லின் மதிப்பு ரூ. 2 கோடிக்கு மேலானதாகும்.

சென்னை மாநிலத்தில் 10 இலட்சம் ஏகருக்கு மேற்பட்டவற்றில் பசுந் தழை உரம் போடப்படுகிறது. இந்த ஆண்டில் 'செயற்கை உரத்'தில் சுய தேவைப் பூர்த்தி என்ற திட்டம், புன்செய் நிலங்களுக்கும் விரிவாக்கப்பட்டிருக்கிறது

குழாய்க் கிணறுகள் ஆங்காங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இதனால், நிலக்கடலை, பருத்தி ஆகிய பயிர்களுக்குக் கோடை காலத்திலும் நீர்ப்பாசன வசதி கிடைக்கிறது. இதனால், இவைகளிலிருந்து கிடைக்கும் வருடாந்திர வருமானம்-ரூ. 2 கோடிக்கு உயரும் என மதிப்பிடப்படுகிறது.

ஒரே மாட்டினால் ஏர் உழமுடியுமா?

சென்னை விவசாயத் துறையினர் ஆராய்ச்சி

சென்னை, செப். 26—

தற்போதுள்ளதைப் போன்று இரண்டு மாடுகள் பூட்டாமல் ஒரே மாட்டைப் பூட்டி உழக்கூடிய ஏரும், பரம்பும் செய்ய முடியுமா என்பது பற்றித் தற்போது சென்னை விவசாயத்துறையினரால் ஆராய்ச்சி செய்யப்படுகிறதாம்.

ஜப்பானிலும், சீனாவிலும் இப்படிப்பட்ட விவசாய கருவிகளைக் கொண்டுதான் பயன்படுத்தப்படுகிறது. அப்படிப்பட்ட முறை இங்கும் வருவதாயிருந்தால், அது, சிறு விவசாயிகளுக்குப் பலன் அளிப்பதாகவிருக்கும்.

குழாய்க் கிணறுகளின் மூலம் வரும் தண்ணீரை ஒரு மாடு மட்டும் பூட்டி இறைக்கக்கூடிய சாதனத்தை ஏற்கனவே சென்னை விவசாயத்துறை கண்டுபிடித்திருக்கிறது.

இந்தியத் தேயிலை

ஜப்பான் வர்த்தகர் விருப்பம்

கல்கத்தா, செப். 25—

தங்கள் தேவைகளுக்குப் பொருத்தமானதாக 'தரம்' அமைந்தால், ஜப்பானில் உள்ள தனிப்பட்ட வர்த்தகர்கள், இந்தியா இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து ஏராளமான தேயிலை இறக்குமதி செய்ய விரும்புகின்றனராம்!

இந்தியாவிலிருந்து ஜப்பானுக்கு அதிகமான தேயிலை ஏற்றுமதி செய்ய முடியுமா என்பதை அறிய இரு ஜப்பான் வர்த்தகர்கள், இங்கு வந்துள்ளனர்.

விலைகள் நியாயமானவையாக இருக்குமானால், இந்தியக் கருப்புத் தேயிலையை அவர்கள் வாங்கிக் கொள்ளத் தயாராக இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இட்லரின் கப்பல் படைத் தளபதி விடுதலை

பெர்லின்—

இட்லரின் கப்பல் படைத் தளபதியாயிருந்த ராயெடெர் என்பவர், யுத்தக் குற்றவாளிகள் முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்டார் என்று தெரிகிறது. அவரது வயோதிக நிலையாலும், உடல்நலக் குறைவாலும், அவர், கடந்த செப். 26-ந் தேதி விடுவிக்கப்பட்டதாகப் பிரிட்டிஷ், பிரெஞ்சு, ரஷ்ய, அமெரிக்க அதிகாரிகள் விடுத்துள்ள குறிப்பொன்று கூறுகிறது.

பனி மனிதனைக் கண்டுபிடிக்க முயற்சி

டென்சிங் தலைமை ஏற்பார்?

கல்கத்தா, செப். 26—

'பனி மனிதனை'க் கண்டுபிடிக்க 'ஷெர்பா'க்கள் குழுவொன்று இமயமலை மீது ஏறுவதற்கு, முயற்சிகள் செய்யப்படுகின்றன; இதற்கு அநேக காரணங்கள் உள்ளன.

'பனி மனிதன்' இருப்பதாக 'ஷெர்பா'க்களிடையே பாரம்பரிய நம்பிக்கை வேறு இருக்கிறதாம்.

மலையேறும் குழுவுக்குத் தலைமை தாங்குமாறு ஷெர்பாக்கள், டென்சிங்கைக் கேட்டுக்கொண்டனர்.

மலையேறும் முயற்சிக்கு அதிகம் செலவாகாது; ஏனெனில், மலையேறும் வெளிநாட்டுக் குழுவினர் அளித்துள்ள நல்ல சாதனங்கள் உபயோகிக்கப்படும்.

கட்சியிலிருந்து கொய்ராலாவிற்குக் கல்தா!

காட்மண்டு, செப். 26—

நேப்பாள தேசீய ஜனநாயகக் கட்சியின் பிளவுபட்ட ஒரு கோஷ்டியின் தலைவர் பதவியினின்றும் முன்னாள் பிரதம மந்திரியான எம். பி. கொய்ராலா விலக்கப்பட்டிருக்கிறார்.

கட்சியின் பொது உறுப்பினர் கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. முன்பு கட்சியின் செயற்குழு, கொய்ராலா மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தீர்மானித்திருந்தது.

தயாநிதி ஷர்மா என்பார், கட்சியின் தலைவராகியுள்ளார்.

கம்யூனிஸ்டுத் தலைவருக்கு மரண தண்டனை

தெஹ்ரான், செப். 25—

ஈரானில் சட்டவிரோதமாக்கப்பட்டு விட்ட டூடே கட்சியை நிறுவிய கம்யூனிஸ்டுத் தலைவரான மார்டெஜா யாஜ்டி என்பவருக்கு, இராணுவ நீதிமன்றம் ஒன்று, ஈரான் மன்னரையும், அரசியல் சட்டரீதியான ஆட்சியையும் கவிழ்த்துவிட்டு, கம்யூனிஸ்டு ஆட்சியை நிலைநாட்ட முயற்சித்த குற்றத்திற்காக மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது என்று தெரிகிறது.

சினிமா நடிகை மீது திராவகம் வீச்சு

லாகூர், செப். 26—

முகத்தில் ஏற்பட்ட அபாயகரமான திராவகப் புண்களின் சிகிச்சைக்காகப் பிரபல சினிமா நடிகை நிலோபர் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

காலூ என்பவர், இந்த நடிகையை மணம் செய்துகொள்ள ஆவல் கொண்டிருந்தார் என்றும், ஆனால், அவரை அந்நடிகை ஏமாற்றிவிட்டார் என்றும், அதனால் ஆத்திரமடைந்த காலூ, அந்நடிகையின் மீது திராவகத்தை வீசினார் என்றும் கூறப்படுகிறது.

பாக். செய்தித் தாள்கள் விலை உயரும்

டாக்கா, செப். 26—

கிழக்கு பாகிஸ்தான் செய்தித்தாள் சங்கச் செயற்குழுவினர், எல்லா செய்தித் தாள்களின் விலையையும் அரையணா உயர்த்துவது என்று தீர்மானித்திருக்கின்றனர்.

சங்கத்தில் உறுப்பினராயுள்ள எல்லா செய்தித்தாள் நிறுவனங்களும், டிசம்பர் இறுதிக்குள் விலை உயர்வை அமுல் செய்யும் என்று கூறப்படுகிறது.

பாகிஸ்தான் நாணய மதிப்புக் குறைக்கப்பட்டதினால், இயந்திரங்கள், உபகரணங்கள் போன்ற செய்தித்தாள் தயாரிப்புக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் 50 சதவிகிதம் வரை விலை உயர்ந்துவிட்டிருப்பதாலேயே இந்த முடிவு மெற்கொள்ளப்பட்டதாகச் செயற்குழு தெரிவிக்கிறது.

நாட்டுப் பிரிவினை கோருகிறது நாடு!

கழக ஆண்டு விழா கொண்டாடினர் திராவிடர்!

★

இத்திங்கள் 17—23-ந் தேதி வரையிலுள்ள ஒரு வார காலத்தைத் திராவிட நாடு பிரிவினை வாரமாகவும், தி. மு. கழக 7-வது ஆண்டு விழாவாகவும் கொண்டு விழா நடத்துமாறு தி. மு. கழகத் தலைமை நிலையம் விடுத்த வேண்டுகோளின்படி, நாடெங்குமுள்ள தி. மு. கழகங்களும், உட்கிளைக் கழகங்களும் விழாக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தியும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும் கொண்டாடியுள்ளன.

"பிரிந்துபோகும் தனி உரிமையோடு கூடிய தமிழகம்—ஆந்திரம்—கர்நாடகம்(துளுவம் உட்பட)—கேரளம் ஆகிய பகுதிகள், மொழிவழியிலும், தேவையான மாநில உரிமைகள் வழியும் தனித் தனிப் பிரிந்து, வெளிநாட்டு—வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு, வடநாட்டு அரசியல் ஆதிக்கத் தடுப்பு, வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியத் தடுப்பு, வாணிபம், போக்குவரத்துப் பற்றுக்கோடுகள், தபால்-தந்தி, உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, நாணயச் செலாவணி, இன்னபிற வழிகளில் குறைந்த அளவுத் திட்டத்தில், ஒன்றுபட்ட சுதந்திரச் சமதர்மத் திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியை அடைய நாம் அனைவரும் பாடுபடுவோமாக"

என்ற தீர்மானத்தையும் அவைகள் ஒரேமனதாக நிறைவேற்றியுள்ளன. நாடெங்கும் நடைபெற்ற மேற்படி விழாச் செய்திகள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன :—

கீரனூர்

17—9—55 முதல் 23—9—55 முடிய ஒரு வாரமாக, இவ்வூரில் விழாக் கொண்டாடப்பட்டது. திராவிடநாட்டுப் பிரிவினையின் அவசியத்தை விளக்கமாக எழுதி விளம்பரம் செய்யப்பட்டது. வாரம் முழுதும் கொள்கை விளக்க அட்டைகளும் படங்களும் கொண்ட கண்காட்சிகள் நடத்தப்பட்டன. 23—9—55-ல், இசை நிகழ்ச்சியும் 'மாங்காய் ஊறுகாய்' நாடகமும் இலவசமாய் நடத்திக் காண்பிக்கப்பட்டது.

சென்னை 24-வது வட்டம்

18—9—55 காலை 10 மணியளவில், தோழர் ஆர். டி. அரசு தலைமையில், கழகப் பணிமனையில் நடைபெற்றது. தோழர்கள் இளம்பரிதி, மாணிக்கம், மூர்த்தி, காசிநாதன், இரங்கநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டதுடன், பகல் 11 மணிக்கு ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்பட்டது.

மாலை 5½ மணிக்கு, படவேட்டம்மன் கோயில் தெரு வழியாக ஊர்வலம் நடைபெற்றதுடன், கழகப் பணிமனையில் தோழர் இளம்பரிதி கழகக் கொடியேற்றி வைத்தார்.

கொல்லைக்கோம்பை

18—9—55 மாலை 3 மணியளவில், நீலகிரி, கொல்லைக்கோம்பையில் தோழர் கு. இராமக்குட்டி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், சுந்தரேசுவரன், குந்தை பேப்பன், மாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மதுரை

19—9—55 இரவு 10 மணிக்கு மதுரை ஆட்டுமந்தை பொட்டல் சந்தில் மீன் மார்க்கெட் சமீபம் உள்ள அறிவு வளர்ச்சி படிப்பகத்தின் முதலாவது ஆண்டு விழா—திராவிட நாடு பிரிவினை நாள் விழா மஜீத் திடலில், தோழர் கே. ஆர். அனீபா தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ் பி. எஸ். அமீது ஆண்டு அறிக்கை வாசித்தார். தோழர்கள் ஏ எஸ் கலைநேசன், ச. எமராசன், கே. எஸ் சந்தானம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் டி. கே. சரீப் அவர்களது குழுவினர் இன்னிசை விருந்து நடைபெற்றது

பெரியகலையம்புத்தூர்

23—9—55 மாலை 6 மணியளவில், பெரியகலையம்புத்தூர் தி. மு, கிளைக் கழகத் துவக்க விழாவும் நாட்டுப் பிரிவினை நாள் பொதுக் கூட்டமும், தோழர் டி. என். செல்லப்பா கட்டிடத்திற்கு எதிர்ப்புறமுள்ள அழகிரி திடலில் தோழர் கங்காதரன் தலைமையில் நடைபெற்றது. தோழர் மு வசனப்பித்தன் சொற்பொழிவாற்றினார்.

சென்னை 35-வது வட்டம்

21—9—55 மாலை 6½ மணிக்கு, கிளைக் கழகத்தில் தோழர் இறையரசு தலைமையில் விழா நடைபெற்றது. தோழர்கள் இளங்கீரன், கிருட்டிணமூர்த்தி, சா. வில்லவன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வேலாயுதம்பாளையம்

22—9—55 மாலை தோழர் கண்ணதாசன், சேமங்கி, கரப்பாளையம், புகளூர் முதலிய இடங்களில் விழாவினை ஒட்டி, கழகக் கொடியினை ஏற்றுவித்து, தோழர்களுக்கு உறுதி மொழியினை எடுத்துக்கூறி, சொற்பொழிவாற்றினார். மாலை 7-30 மணிக்கு, வேலாயுதம்பாளையத்தில், தி. மு கழக அலுவலகத்தைத் திறந்து வைத்தார். இரவு 8-30 மணிக்கு, தோழர் சு. திருவேங்கிடம் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் வே. கா. ராசு, கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் கண்ணதாசன் கழகக் கொடியேற்றுவித்தார் இரவு 10-30 மணிக்கு, மேற்படி விழாவினை ஒட்டி, தோழர் க பழனியப்பன் தலைமையில் மறுமலர்ச்சி நாடக மன்றத்தாரால் 'சிந்தித்துப் பார்' நாடகம் நடைபெற்றது. தோழர் நாவரசன் நாடகம் பற்றியும், திராவிட நாட்டுப் பிரிவினை வாரம் பற்றியும் பேசினார்.

கவுந்தப்பாடி

22—9—55 காலை 7½ மணிக்கு, கவுந்தப்பாடி பெரியார் மைதானத்திலிருந்து, தோழர் இரா. அர்த்தநாரி தலைமையில் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு, தர்மாபுரி, செந்தாம்பாளையம், சலங்கபாளையம் வழியாகக் கவுண்டம்பாளையத்தை அடைந்தது; அங்கு, தோழர் வெங்கிடுசாமியால் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. பின்னர் கவுண்டம்புதூரை அடைந்ததும், தோழர் க. சோமசுந்திரம் தோழர்கள் அனைவருக்கும் தேநீர் வழங்கினார். பின்னர், அங்கிருந்து, குட்டிபாளையம் சிறையாம்பாளையம், பெருந்தலையூர், மேட்டுப்பாளையம், புதூர், காட்டுப்பாளையம், பொம்மன்பட்டி, பாப்பாங்காட்டூர் ஆகிய ஊர்கள் வழியாக அய்யம்பாளையத்தை அடைந்தது. அங்கு, தி. மு. கழகக் கிளைச் சார்பில், குளிர்பானமும், தேநீரும் வழங்கப்பட்டன. அங்கிருந்து ஓடத்துரை, நஞ்சகவுண்டம்பாளையம், பாவண கவுண்டனூர், வழியாகக் கவுந்தப்பாடி பெரியார் மைதானத்தை அடைந்தது. இறுதியில், அங்கு நடைபெற்ற தேநீர் விருந்து நிகழ்ச்சியுடன் ஊர்வலம் கலைந்தது.

அன்று மாலை 7 மணிக்கு, அய்யம்பாளையத்தில், தோழர் கண்ணப்பா தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர்கள் மா. சென்றாயன், க. சோமசுந்தரம், இரா. அர்த்தநாரி க அன்பரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வளவனூர்

23-9-55-ல், தோழர் அ. பழனியப்பன் தலைமையில், விழா சிறப்புற நடைபெற்றது. தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், நாஞ்சில்—கி. மனோகரன் ஆகியோர் திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியத்தையும், நேருவின் அயல் நாட்டுக் கொள்கையையும், ஐந்தாண்டுத் திட்டத்தையும் பற்றி விரிவாகச் சொற்பொழிவாற்றினர்.

செங்காட்டுப்பட்டி

23—9—55 இரவு 8 மணிக்கு தோழர் வி. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் அரு. ஆதிமூலம், பெ அரங்கசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பணிமனையில் கழகக் கொடி ஏற்றப்பட்டது.

மஞ்சைநகர்

23—9—55 மாலை 6 மணிக்கு. மஞ்சை நகர் மறுமலர்ச்சி மன்றச் சார்பில் விழா கொண்டாடப்பட்டது. தோழர் சு. ரங்கராசு தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் மாறன், திங்கள்கொண்டான், ப. வரதராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

புகலூர்

23—9—55 காலை 9 மணிக்கு நொய்யலில் ஏராளமான சைக்கிள் களடங்கிய நீண்டதோர் ஊர்வலம், தோழர் எஸ். கே. சாமியப்பன் தலைமையில் நடைபெற்றது. வழி நெடுக, சிற்றூர் தெருக்களிலெல்லாம் கொடியேற்று நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஊர்வலம் நன்னியூரை அடைந்ததும், தோழர் எஸ். கே. நாச்சிமுத்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் டி. பி. மூர்த்தி, வி. கே. ராஜு, மதிமாறன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் தோழர் என். கே. காந்தி அவர்களால் சிற்றுண்டி விருந்து நடைபெற்றது.

விளாப்பாக்கம்

23—9—55 மாலை 4½ மணிக்கு ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய வீதிகள் வழியாகச் சென்று, 6 மணிக்கு கழகக் கட்டிடம் வந்து சேர்ந்தது. பிறகு தோழர் ரெ. பே. சின்னப்பா தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

திருச்சினம்பூண்டி

23—9—55 மாலை 4 மணிக்கு, தோழர் பெ. இராமையன் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் ப. கலியபெருமாள், சி. துரைமாணிக்கம், கோ. இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

பண்ணிமேடு எஸ்டேட்

23—9—55 மாலை, தோழர் எம். பெரியசாமி தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். அணத்தலை சொற்பொழிவாற்றினார். தோழர் வி. மாரியப்பா கழகக்கொடியேற்றினார்.

ஓரக்காட்டுப்பேட்டை

23—9—55 மாலை 5½ மணிக்கு, ஊர்வலமும், 6½ மணிக்கு தோழர் க. ஆ. நாகப்பன் அவர்களால் கொடியேற்று விழாவும், 7 மணிக்கு தோழர் கா ரூ. காளத்தி தலைமையில் விழாப் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் சோலை, க. சுந்தரேசன், கி. மு. இளங்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பாவூர்சத்திரம்

23—9—55ல், விழாவையொட்டி, பாவூர்சத்திரம், குறும்பலாப்பேரி ஆகிய ஊர்களில், பாவூர்சத்திரம் கிளைக் கழகச் செயலாளர் தலைமையில் தி. மு. கழகக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது.

சலகண்டபுரம்

23—9—55ல், தோழர் அ. மு. அண்ணாமலை இல்லத்தில், அவரது தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பொ. விங்கையன், ஏ. எஸ். கே. சாமி, ஏ. இராமகாதன், அ மு. அண்ணாமலை ஆகியோரால் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

மேலக்கற்கண்டார் கோட்டை

23—9—55 மாலை 6½ மணிக்கு, கழக இல்லத்தில், தோழர் கே. துரைராஜ் தலைமையில் விழா நடைபெற்றது. கழகத் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டம் வழங்கப்பட்டது. கழக இல்லத்தில் கழகக் கொடியேற்றப்பட்டதுடன், கழக இல்லத்தின் முன் பக்கம் கொடி, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டது.

பல்லடம்

25—9—55 மாலை 6 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில் பொங்காளி அம்மன் கோயில் அருகில் தோழர் எம். முத்துரத்தினம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஏ. கிருஷ்ணசாமி, நாராயணன், பி. எம். பொன்னுசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நாமக்கல்

25—9—55 மாலை 4 மணிக்கு, கழக அலுவலகத்தில் தோழர் என். பி. செல்லப்பன் தலைமையில் விழா நடைபெற்றது. கழக அலுவலகம் தோரணங்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டது. வந்திருந்த நூற்றுக்கு மேற்பட்ட கழகத் தோழர்களுக்குத் தேநீர் விருந்தளிக்கப்பட்டது. தோழர்கள் க. பெருமாள், என். வி. ராஜு, வி. எம். கந்தசாமி, என். பி. முருகேசன் ஆகியோர் கழகக் கொள்கைகளையும், நோக்கங்களையும் விளக்கியதுடன், எதிர்கால வேலைத் திட்டத்தைப் பற்றியும் பேசினர். பின்னர் புகைப்படமும் எடுக்கப்பட்டது.

வேலூர்—வேலப்பாடி

25-9-55ல், வேலப்பாடி தி. மு. கிளைக் கழகச் சார்பில், தோழர் இளஞ்செழியன் தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எம் பி. கோவிந்தசாமி, பாண்டியன், பால கிருட்டிணன், கருத்தோவியன், ஏ. எல். சி. கிருட்டிணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் எம். பி. கோவிந்தசாமி பேசுகையில், காங்கிரஸ் ஆட்சியிலுள்ள ஊழல்களை எடுத்துக் கூறினார்.

புதுவை வட்டத்தில்... ...

25—9—55 மாலை 6-30 மணியளவில் புதுவை ஒதியஞ்சாலைத் திடலில், தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில், வட்டக் குழுச் சார்பில் விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் செ. கோவிந்தராசன், வாணிதாசன், எம். எஸ். இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

* * *

முதலியார்பேட்டை

24—9—55 மாலை 7 மணிக்கு, முதலியார்பேட்டையில், தோழர் பெ. குப்புசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் ச. சிவப்பிரகாசம் சிறிது பேசியபின், தோழர் நாஞ்சில் கி. மனோகரன் சொற்பொழிவாற்றினார்.

* * *

இலாசுப்பேட்டை

25—9—55 காலை 9 மணிக்கு, இலாசுப்பேட்டையில் தோழர் குருசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் செ கோவிந்தராசன், கோ. பாண்டியன், ச. சிவப்பிரகாசம், வாணிதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

முதலியார்பேட்டையிலும், இலாசுப்பேட்டையிலும் கூட்டத்தன்று பகல் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கியும், ஏழை மக்களுக்குக் கஞ்சி ஊற்றியும் விழா வாற்றினர்.

சென்னை நகரசபைத் தேர்தல்கள்

மேலும் பல முடிவுகளில் வாக்குப் பதிவு எண்ணிக்கையில் 'ஏமாற்றம்!'

சென்னை, செப் 28—

சென்னை நகரசபைக்கு நடைபெற்ற தேர்தலின் முடிவுகளில் பல, நேற்று மேலும் அறிவிக்கப்பட்டது; போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களென அறிவிக்கப்பட்டுள்ள 7 காங்கிரஸ்காரர்களையும் சேர்த்துக் காங்கிரஸ் கட்சிக்கு இது வரையில் 22 இடங்களும், ம. சோ. கட்சிக்கு 2 இடங்களும், சோஷலிஸ்டுத் தொழிலாளர் முன்னணிக்கு 1-ம், சுயேச்சையாளர்களுக்கு 10 இடங்களும் கிடைத்துள்ளன.

நேற்று அறிவித்த தொகுதிகளிலும்கூட, பதிவாகியுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது; 26,000 வாக்காளர்கள் உள்ள தொகுதியில் 8,386 வாக்குகளும், 13,873 வாக்காளர்கள் உள்ள தொகுதியில் 3,321 வாக்குகளும், 17,572 வாக்காளர்கள் உள்ள தொகுதியில் 7,288 வாக்குகளும் பதிவாகியுள்ளன; செல்லாத 'ஓட்'டுகளின் எண்ணிக்கையும், 'உச்ச'மாகவே இருந்திருக்கிறது. விவரங்கள் இங்கு தரப்படுகிறது :—

13. கச்சாலீஸ்வரர்

வாக்குப் பதிவு இருக்கவில்லை. அபேட்சகர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

14. கோத்தவால்சாவடி

வாக்காளர்கள்	9,999
பதிவானது	3,877
செல்லாதவை	322

15. சௌகார்பேட்டை

வாக்குப் பதிவு இருக்கவில்லை. அபேட்சகர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

16. தண்ணீர்தொட்டி

வாக்காளர்கள்	19,504
பதிவானது	6,872
செல்லாதவை	305

21. அயன்புரம்

வாக்காளர்கள்	16,724
பதிவானது	7,187
செல்லாதவை	315

22. கீழ்ப்பாக்கம்

வாக்காளர்கள்	13,650
பதிவானது	4,694
செல்லாதவை	291

23. புரசைவாக்கம்

வாக்குப் பதிவு இருக்கவில்லை. அபேட்சகர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

24. குயப்பேட்டை

வாக்காளர்கள்	25,100
பதிவானது	8,464
செல்லாதவை	540

25. வேப்பேரி

வாக்காளர்கள்	11,556
பதிவானது	4,212
செல்லாதவை	163

26. பெரியமேட்

வாக்காளர்கள்	19,180
பதிவானது	7,692
செல்லாதவை	443

27. எடப்பாளையம்

வாக்காளர்கள்	10,261
பதிவானது	3,496
செல்லாதவை	139

28. பார்க்டவுன்

வாக்காளர்கள்	8,136
பதிவானது	2,771
செல்லாதவை	122

29. நேப்பியர் பார்க்

வாக்காளர்கள்	13,169
பதிவானது	5,292
செல்லாதவை	192

30. சிந்தாதிரிப்பேட்டை

வாக்காளர்கள்	16,050
பதிவானது	7,220
செல்லாதவை	390

31. கோமளீசுவரன்பேட்டை

வாக்காளர்கள்	16,151
பதிவானது	7,894
செல்லாதவை	246

32. எழும்பூர்

வாக்காளர்கள்	9,222
பதிவானது	3,356
செல்லாதவை	186

35. கோடம்பாக்கம்

வாக்காளர்கள்	26,897
பதிவானது	8,386
செல்லாதவை	584

36. தியாகராயநகர் (வடக்கு)

வாக்காளர்கள்	13,873
பதிவானது	3,321
செல்லாதவை	167

37. இராயப்பேட்டை

வாக்காளர்கள்	14,751
பதிவானது	6,249
செல்லாதவை	278

38. புதுப்பாக்கம்

வாக்குப் பதிவு இருக்கவில்லை. அபேட்சகர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

39. திருவட்டீஸ்வரன் பேட்டை

வாக்காளர்கள்	17,572
பதிவானது	7,288
செல்லாதவை	468

சுவர் சரிந்தது — கூரை பறந்தது!

மதுரை, செப். 27—

சிவகாசிக்கு அருகேயுள்ள திருத்தங்கல் தீப்பெட்டித் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட வெடி விபத்தில், இருவர் மாண்டனர் என்றும் இருவர் பலமான காயமடைந்தனர் என்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

வெடி விபத்தின் காரணமாகத் தொழிற்சாலையின் சுவர்கள் சரிந்தனவாம்; தகரக் கூரை பறந்து விட்டதாம்.

4,000 இரசாயனத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

பெல்ஜியம் முழுவதும், 7 இரசாயனத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சுமார் 4,000 தொழிலாளர்கள், வாரத்திற்கு 5 நாட்கள் மட்டுமே வேலை நாட்கள் இருக்க வேண்டுமென்ற கோரிக்கைக்காக 26-ந் தேதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அல்ஜீரியாவில் 80 பேர் படுகொலை

அல்ஜியர்ஸ், செப். 27—

அல்ஜீரியாவில், பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று கூறி பிரெஞ்சுத் தருப்புகள் பலர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும், அதன் விளைவாக 80 பேர் வரை கொல்லப்பட்டனர் என்றும் இராணுவவட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

கல்லூரி ஆசிரியர்கள் ஊதியம் உயரும்?

புதுடில்லி, செப். 27—

பல்கலைக் கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளின் ஆசிரியர்கள் ஊதியத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக் கழக மானியக் குழு, இந்திய சர்க்காருக்கும், மாநில சர்க்கார்களுக்கும் சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது.

பம்பாய்—கோரேகான் தி. மு. கழக (கிளை) அமைப்புக் குழுக் கூட்டம்

2—10—55 காலை 8½ மணிக்கு, பம்பாய்-கோரேகான் ஜவாஹர் நகரில், தோழர் நியாகராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் த. மு. பொற்கோ, இளம்வழுதி, சண்முகராசன், தஞ்சைத்திரை, இரா. இளந்தீரன், மற்றும் பல கிளைக் கழகத் தோழர்கள் பேசுவர்.

ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்க அவசரக் கூட்டம்

சென்னை மாவட்ட சர்க்கார் உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்க அவசரக் கூட்டம், சென்னை-மண்ணடி, எண் 94-95, புதுத் தெருவில் உள்ள ஜி. இராஜமன்னர் செட்டி ஆரம்பப் பள்ளியில், 1—10—55 மாலை 5 மணிக்கு நடைபெறும். உறுப்பினர்கள் தவறாது வருகைதருமாறு, மேற்படி சங்கத் தலைவர் தோழர் பி. வீராசாமி அறிவித்திருக்கிறார்.

மறுக்கின்றனர்!

நியூயார்க், செப். 27—

எகிப்துக்கு ஆயுதம் வழங்குவதில் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளிடையே கருத்து வேறுபாடு இருப்பதாக வெளிவந்த செய்திகளை, பிரிட்டிஷ் வெளி விவகார இலாகா மந்திரி மாக்மில்லனும், அமெரிக்க இராஜாங்க மந்திரி டல்லசும் கூட்டாக மறுத்துள்ளனர்.

சென்னை-ஆந்திரா எல்லைப்பிரச்சினை

16 தாலுகாக்களில் புள்ளிவிவரம் சேகரிக்கப்பட்டுள்ளது

ஆந்திர முதலமைச்சர் கோபாலர் நம்பிக்கை

கர்னூல், செப். 27—

"சென்னை—ஆந்திரா மாநிலங்களின் எல்லைகளிலுள்ள தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளையும் பேசும் கிராமங்களின் எதிர்காலத்தைப் பற்றி இரு மாநில சர்க்கார்களுக்குமிடையே இன்னும் எந்தவித உடன்பாடும் ஏற்படவில்லை" என்று, ஆந்திர முதல் மந்திரி கோபாலர் ஆந்திரா சட்டசபையில் அறிவித்தார்.

"சித்தூர், நெல்லூர், செங்கற்பட்டு, சேலம், வடாற்காடு ஆகிய மாவட்டங்களிலுள்ள காளஹஸ்தி, புத்தூர், திருத்தணி, சந்திரகிரி, பழமானேரி, சித்தூர், சூலூர்பேட்டை, பொன்னேரி, திருவள்ளூர், சைதாப்பேட்டை, ஹோசூர், கிருஷ்ணகிரி, அரக்கோணம், குடியாத்தம், வாலாஜாபேட்டை, திருப்பத்தூர் ஆகிய தாலுக்காக்களில் எவ்வளவு பேர்கள் என்ன மொழி பேசுகிறார்களென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது," என்றும் அவர் கூறினார்.

"1951-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கை அடிப்படையாகக் கொண்டு இந்த விவரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதுபற்றி சில யோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன; அவற்றை இப்போது வெளியிடுவது பொதுமக்கள் நலன்களுக்கு உகந்ததாகாது" என்றும் அவர் கூறியுள்ளார்.

"பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்பதே நம் நோக்கம்; இந்த விஷயத்தில் அவசரப்பட்டு எந்த முடிவும் செய்ய முடியாது; ஒரு முடிவுக்கு வருவதற்குமுன்பு எல்லா அம்சங்களையும் இரு சர்க்கார்களும் கவனமாகப் பரிசீலனை செய்வார்கள்; புள்ளி விவரங்களைச் சேகரித்த அதிகாரிகள் அதில் ஏதோ 'தில்லுமுல்லு' செய்துவிட்டார்கள் என்ற புகார்களை நம்பவேண்டாம்," என்றார்.

வடநாட்டவரின் .....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வின் கௌரவத்திற்காக, இந்தி மொழி ஆங்கிலத்திற்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்;

"ஒருவருக்கு இந்தி தெரியவில்லை என்ற குறைபாட்டினாலேயே, அவர் வேறு எல்லா தகுதியும் பெற்றிருந்தால், இந்திய சர்க்கார் உத்தியோகங்கள் தரப்படமாட்டார் என்பதல்ல —என்ற உறுதி மொழி தந்த பிறகும், இந்தி மொழி பற்றி சந்தேகம், அச்சம் எவருக்கும் இருக்கத் தேவை இல்லை இந்தியாவின் 'ஒற்றுமை'க்காக இந்தி மொழி அவசியம் தேவைப்படுகிறது.

"இந்தி மொழிக் குழுவில், ராசியல் சட்டம் ஏற்றுக்கொண்டுள்ள 14 வட்டார மொழிகளுக்கும் குழுவில் பிரதிநிதித்துவம்தரப்பட்டிருக்கிறது; சுமார் 5 அல்லது 6 பேர்கள் மட்டுமே இந்தி மொழிப் பகுதியிலிருந்து வருபவர்கள்; மேலும், குழுவினரை, இந்தி மொழிப் பகுதியினர் — இந்தி மொழி அல்லாத பகுதியினர் என்று பிரிக்கவேண்டாம்," என்று பண்டித பந்த் மழுப்பிவிட்டிருக்கிறார்.

பொருளாதார நிலை உயர்ந்தால் பிச்சை எடுப்பது குறைந்துவிடுமாம்!

சிறுவர்கள் பிச்சையெடுப்பதைத் தடுப்பதற்குச் சட்டம் வருமென நிதி மந்திரி அறிவிப்பு

சென்னை, செப். 26—

"சிறுவர்கள் பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்குத் தனிச் சட்டம் கொண்டுவருவது பற்றி சென்னை சர்க்கார் ஆலோசனை செய்து வருகின்றனர்," என்று, சென்னை சட்டசபையில் நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஆவடிக்கு அருகிலுள்ள மேலப்பாக்கத்தில், போலீஸ் இலாகாவினால் நடத்தப்பட்டுவரும் பிச்சைக்காரர் விடுதிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1,39,000 செலவாகிறதென்றும், பிச்சைக்காரர்களின் உழைப்பின் மூலம் ரூ. 38,600 வருமானம் கிடைத்தது என்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பிச்சைக்காரர் விடுதிகள் திட்டமொன்றும் கிடையாதென்றும், சென்னை நகரிலும், வெளியூர்களிலும், பிச்சைக்காரர்கள் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படவில்லையென்றும் கூறினார்.

பிச்சை எடுத்துப் பழகிப்போனவர்களுக்கு, வேறு வேலை செய்ய உடம்பு வராவதில்லையாகையால், அவர்களை வேறு வேலை செய்யும்படி தூண்டுவது சாத்தியமில்லையென்றும், பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டால், பிச்சை எடுப்பது தானாகவே குறைந்துவிடுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

"தொத்து வியாதியுள்ள பிச்சைக்காரர்களை, நகரிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?" என்று உறுப்பினர் ஒருவர் கேட்டார்.

"தொத்து வியாதியுள்ளவர்கள் பிச்சைக்காரர்களில் மட்டுமல்ல; எல்லா வகுப்பினரிடையேயும் இருக்கிறது; ஆகையால், பிச்சைக்காரர் பிரச்சினையில் மட்டும் நடவடிக்கை எடுப்பது, பொருளாதார அடிப்படையில் பாரபட்சம் காட்டுவதாகும்," என்று, அமைச்சர் குறிப்பிட்டார்.

சென்னை சட்ட சபை புதிய சபாநாயகர்

சென்னை, செப். 27—

சென்னை சட்டசபையின் சபாநாயகராகத் திரு. என். கோபாலமேனன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சட்டசபை உறுப்பினர்களின் வாக்குப் பதிவில் அவருக்கு 134 வாக்குகளும், அவருடன் போட்டியிட்ட திரு. சுயம்பிரகாசம் அவர்களுக்கு 64 வாக்குகளும் கிடைத்தன.

ஆதித்தன் மீது குற்றப் பத்திரிகை தாக்கல்

144 தடை உத்திரவின் கீழ் பிறப்பிக்கப்பட்டிருந்த தடை உத்திரவை மீறி, சட்ட விரோதமாகக் கூட்டம் கூடியதாக திரு. எஸ். பி. ஆதித்தன், மற்றும் பத்து பேர் மீது, போலீசார், சைதை சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர்; செப். 28-ந் தேதியன்று, வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வாக்காளர் பட்டியல்: அமைச்சர் விளக்கம்

சென்னை, செப் 26—

சமீபத்தில் நடைபெறவிருக்கும் முனிசிபல் தேர்தல்கள் சம்பந்தமாக முனிசிபல் கமிஷனர்கள் அவ்வப்போது வாக்காளர்கள் பட்டியலைத் திருத்துவதாயும், இதனால் எல்லோருக்கும் தொந்தரவு ஏற்படுவதாயும், சென்னை சட்டசபையில் எழுப்பப்பட்ட புகாருக்குப் பதிலளிக்கையில், நிதி மந்திரி சொன்னார் :—

"சென்ற ஆண்டில் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் படிதான் இத்தேர்தல்கள் நடைபெறும்; பட்டியல்களைத் திருத்த வேண்டாமென, சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்திரவுகள் சர்க்காரால் அனுப்பப்பட்டுள்ளது; அக்டோபர் முதல் தேதியன்று புதிய வாக்காளர் பட்டியல் அமுலுக்கு வந்து விடுமென்றாலும், இத்தேர்தல்கள், பழைய வாக்காளர் பட்டியல் முறையில்தான் நடைபெறும்.

பச்சைப் பாம்புக்கு பாலகர்கள் பலி!

மூன்று சகோதரர்கள் மாண்ட பரிதாபச் சம்பவம்

இந்தூர், செப். 27—

பச்சைப் பாம்பு ஒன்றினால் கடியுண்டு, உஜ்ஜையின் சிவில் மருத்துவ மனையில் கடந்த ஞாயிறன்று அனுமதிக்கப்பட்ட மூன்று சகோதரர்கள் அன்றே மரணமடைந்தனராம்.

4, 6, 8 வயதுள்ள அந்தச் சகோதரர்கள், 12 வயதுள்ள மற்றொரு சகோதரனுடன் உறங்கிக் கொண்டிருக்கையில், 3 அடி நீள முள்ள அப்பச்சைப் பாம்பு அங்கு வந்து அம்மூன்று சகோதரர்களையும் கடித்துவிடவே, அவர்கள் சத்தமிட்டுள்ளனர்; சகோதரர்களின் குரலைக் கேட்ட பெரிய சகோதரன் எழுந்துவந்து பாம்பை அடித்துக் கொன்றானும்.

காசிக் குன்றுகளில் 'பிளாஸ்டிக்' களிமண்!

மிகவும் கருப்பாக உள்ள 'பிளாஸ்டி'க் களிமண், அசாமிலுள்ள காசிக் குன்று பகுதிகளில் ஏராளமாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, குரியாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம் ஏ.